www.Padasalai.Net www.TrbTnpsc.com

RK

# திருப்புதல் தேர்வு - 2025

**11**- ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 * 1 = 14

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
2. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை – காவு கொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள்
இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத
3. *பொருத்தமான இலக்கிய வடிவம் எது?*
அ) ஏதிலிக்குருவிகள் – மரபுக் கவிதை
ஆ) திருலை முருகன் பள்ளு – சிறுகதை
இ) யானை டாக்டர் – குறும் புதினம்
ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
4. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை? அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி விகாரம் ஈ) பகுதி, விகுதி
5. மண்ணுக்கு வளம் சேர்ப்பன –
அ) மண்புழு ஆ) ஊடு பயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
6. துன்பப்படுபவர் ...................... . அ) தீக்காயம் பட்டவர்
ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
7. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
8. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி
ஆ) வினைத்தொகை, இடவாகு பெயர் இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
9. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
10. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது
அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை
11. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
12. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்
அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலதின் சுவரில்
இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
13. கூவும் குயிலும் கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு
அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்
14. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம் இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

பகுதி II – பிரிவு – I

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 * 2 = 6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. வளருங் காவில் முகில்தொகை ஏறும் – பொன் மாடம் எங்கும் அகிற் புகை நாறும் – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?
17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள – இவ்வடி எதனை குறிப்பிடுகிறது?

பிரிவு – II

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 * 2 = 4

19. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
20. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

பிரிவு – III

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 * 2 = 14

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
23. அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

24. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?
25. கொழுச்சோறு – புணர்ச்சி விதி கூறு.
26. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
27. *பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.*
அ) Carrom ஆ) Plastic
28. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.
29. விகுதிகள் எவற்றை உணர்த்தும் ?
30. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக் குறிப்புத் தருக.

## பகுதி III – பிரிவு – I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 • 4 = 8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது ?
32. விரும்பியரை அடைவது எப்படி ? குறள் வழி விளக்குக.
33. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது ?
34. ‘சேரநாடு செல்வ வளம் மிக்கது’ என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

## பிரிவு – II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 • 4 = 8

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா ? –நும் கருத்தை எழுதுக.
36. “ஏவல் மறுக்கும் சிறு விளைபாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்” இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
37. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள், குறித்து நீவீர் அறிவன யாவை ?
38. தாமஸிகம் என் றால் என் ன ?

## பிரிவு – III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 • 4 = 12

39. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறதே
நாவினாற் சுட்ட வடு – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. *( அல்லது)*
உருவக அணியை சான் று தந்து விளக்குக.
40. பொதுவியல் திணையை சான்று தந்து விளக்குக. *(அல்லது)*
செந்துறைப் பாடாண்பாட்டு துறையினை சான் று தந்து விளக்குக.
41. உள்ளுறை உவமை, இறைச்சி– எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
42. *பின்வரும் பாடலில் அமைந்துள்ள நயங்களில் ஏதேனும் நான்கினை விளக்கு எழுதுக.*

மீன் கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே – ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே!
பானுவெங் கதிர்குளிக்கும் வெண்ணிலாவே – நித்தம்
பாற் கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே!
ஆம்பல்களி கூரவரும் வெண்ணிலாவே!—உனக்கு
அம்புயம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே!
இரவையும் நண்பகலாக்கும் வெண்ணிலாவே – உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ வெண்ணிலாவே! – *கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை*

43. **தமிழாக்கம் தருக.**
அ) Work while you work and play while you play
ஆ) Roads were made for journeys not destinations
இ) Culture does not make people . People make culture.
ஈ) You must be the change you wish to see in the world.

## பகுதி IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 • 6 = 18**

44. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென் கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. *(அல்லது)* வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.
45 நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. *(அல்லது)* சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.
46. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை ? *(அல்லது)* சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**4 + 2 = 6**

47 **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.**
அ) “ யுகத்தினோர் பாடலை” என முடியும் வில்வரத்தினத்தின் பாடலை எழுதுக.
ஆ) “இளைதாக” என தொடங்கும் திருக்குறளை எழுதுக.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com